உ

கணபதி துணை.

சிதம்பரம் தாலுக்கா

# திருநாரையூர் ஆலயத் திருப்பணி
# நிறைவுப் பெருஞ்சாந்தி விசேட
# வழிபாடும், தலவரலாறும்.



கார்த்திகேயன் பிரஸ், சிதம்பரம்.

இதன் விலை] 1943 [அணா ஒன்று.

இத்தலம் சிதம்பரத்திலிருந்து மன்னார்குடி வழியில் பத்து மைலில் உள்ளது.

மோட்டார் வசதி உண்டு.

உ

கணபதி துணை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநாரையூர்த் திருப்பணி நிறைவுப் பெருஞ்சாந்தி விசேட வழிபாடும், தல வரலாறும்.

## பொல்லாப்பிள்ளையார் துதி.

நல்லார்சேர் நாரையூர்
எல்லார்கைம் மாமுகப்
பொல்லார்தாள் போற்றுதும்
எல்லாநன் செய்தவே.

---

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

திருச்சிற்றம்பலம்.

உரையினில் வந்தபாவ முணர்நோய்க ளும்ம
செயறீங்கு குற்ற முலகில்
வரையினி லாமைசெய்த வவைதீரும் வண்ண
மிகவேத்தி நித்த நினைமின்

வரைசிலை யாகவன்று மதின்மூன் றெரித்து
வளர்கங்கு னங்கை வெருவத்
திரையொலி நஞ்சமுண்ட சிவன்மேய செல்வத்
திருநாரை யூர்கை தொழவே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு நாயனார் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்

சொல்லானைப் பொருளானைச் சுருதியானைச்
சுடராழி நெடுமாலுக் கருள்செய்தானை
அல்லானைப் பகலானை யரியான்றன்னை
யடியார்கட் கெளியானை யரண்மூன்றெய்த
வில்லானைச் சரம்விசயற் கருள்செய்தானை
வெங்கதிரோன் மாமுனிவர் விரும்பியேத்தும்
நல்லானைத் தீயாடும் நம்பன்றன்னை
நாரையூர் நன்னகரிற் கண்டேனானே.

திருச்சிற்றம்பலம்.

---

## விநாயகர் திருவிரட்டை மணிமாலை.

என்னை நினைந்தடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசுமகிழ் சோலைவிய னாரையூர் முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான்.

## நம்பியாண்டார் நம்பிகள் துதி.

முன்னரு மறைக ளன்கா வகுத்திடு முனிவ னணைப்
புன்னருந் தமிழ்வே தங்கள் பதினொரு முறைக ளாக
மன்னிட வுலகி லென்றும் வகுத்தவன் கருணைச் செல்வம்
துன்னிய நம்பி யாண்டார் நம்பிதா டொழுது வாழ்வாம்.

திருச்சிற்றம்பலம்.

உலகின்கண் காணப்படும் எண்ணிறந்த பிறவி பேதங்களுள்ளும் மிகமேலாகிய பிறவி மானிடப் பிறவியேயாம். இம்மையிலும் மறுமையிலும் உயர்ந்த இன்ப வாழ்வுகளைப் பெறுதற்கும் ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த வீட்டின்ப வாழ்வைப் பெறுதற்கும் சிறந்த சாதனம் மானிடப் பிறவியே ஆதலால் என்க. அத்துணைச் சிறப்பு வாய்ந்த அரிய மானிடப் பிறவியைப் பெற்றோர், தாம் விரும்பிய எல்லா நன்மைகளையும் பெறுதற்குச் சிறந்த சாதனமாவது சிவலிங்க

வழிபாடொன்றேயாம். அவ்வழிபாட்டுக்குச் சிறந்த புண்ணியபூமி நமது பாரத நாடேயாம்.

இப்பாரத பூமியிலே சிவபெருமான் எளிதில் வெளிப்பட்டுத் தம் அன்பரை உய்யக் கொள்ளும் தன்மையை அறிந்த இந்திரன், அயன், திருமால் முதலிய பெருந்தேவர்கள் நாமும் இப்புவனியிலே போய்ப் பிறவாமல் விண்ணுலகத்திலிருந்து நமது வாணாளை வீணாகப் போக்குகின்றோம்; இப்பூமியிலே சிவபிரான் தன் அடியார்களை உய்யக்கொள்கின்றவாறுதான் என்னே என்று ஏக்கறுநிற்பர். அவ்வானிடத்தவரும் இந்த மண்மேல் வந்து அரன் றன்னை அருச்சித்து வேண்டும் செல்வங்களைப் பெறுவர் என்பது, "ப்ரஹ்மணஸ் ஸ்ருஷ்டி கர்த்ருத்வம் விஷ்ணோர் தாநவ மார்த்தநம் ஸ்வர்க்காதிபத்ய மிந்திரஸ்ய சிவபூஜாவிதே: பலம்" இதன் பொருள், "பிரமா படைத்தற்றொழிலுக்கு வினைமுதலாந் தன்மையும், விஷ்ணு அசுரர்களை அடக்குந்தன்மையும், இந்திரன் விண்ணுலகத்துக் கிறைவனும் தன்மையும் சிவபூஜாவிதியின் பயனும்" என்று மகாபாரதத் துரோணபர்வத்துக்கூறப்படுதல் பற்றி அறியப்படும். "தவ ' ஸ்ரீயே ' மருதோ ' மர் ஜயந்த ' ருத்ர ' யத்தே '

ஜனிம ' சாரு ' சித்ரம் " இதன் பொருள் " ருத்ரமூர்த்தியே! தேவர்களெல்லாரும் செல்வத்தைப் பெறும் பொருட்டு உனது அழகிய சிவலிங்கத்தை அபிடேகித்து வழிபடுகின்றார்கள்" என்று இருக்கு வேதத்து ஐந்தாம் மண்டலத்தின் மூன்றாவது பிராமணத்தின் மூன்றாவது மந்திரமும், வானிடத்தவரும் மண்மேல் வந்து அரன்றன்னை அருச்சிப்பர் மன்பதை வலியுறுத்துகின்றது.

இத்துணைப் பெருமை வாய்ந்த சிவலிங்க வழிபாடு செய்தற்குச் சிறந்த பாரதநாட்டிலே தெய்வத் திருவருளால் அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சைவ சமய பரமாசாரியார்கள் பல அற்புதங்களாலே சைவ சமயத்தைத் தாபனஞ் செய்து அருளிச் செய்த தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற சிவதலங்கள் சிறப்புடையன. அவற்றுள்ளும், திருஞானசம்பந்தர் திருப்பதிகம் மூன்றும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் இரண்டுமாக ஐந்து திருப்பதிகங்களும் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய இரட்டைமணி மாலையும் பெற்றுவிளங்கும் திருநாரையூர் மிகச்சிறந்த சிவதலமாகும்.

இத்தலத்திலே அவதரித்த ஆதிசைவ மறைச் சிறுவராகிய ஸ்ரீ நம்பியாண்டார் நம்பிகள் ஐந் தாண்டுப்பிராயத்தினராய் வித்தை பயிலுங் காலத்தில் ஒருநாள் தந்தையார் வேற்றூர் சென்றனராகத் தாம் பொல்லாப் பிள்ளையாரைப் பூசை செய்யப்புகுந்து, அப்பெருமான் திருமுன்பு நிவேதனத்தை வைத்துத் திருவமுது கொள்ளும்படி வேண்டிக்கொள்ளவும், பெருமான் திருவமுது கொள்ளாமையால் தமது தலையைக் கல்மீது மோதப்புகுதலும், பொல்லாப் பிள்ளையார் அவரைத் தடுத்து நிவேதனத்தைத் திரு வமுது கொண்டருளி அவருக்கு வேதாகம முதலிய சகல அபர ஞானங்களையும், பரஞானத்தையும் கொடுத்தருளினர். நம்பிகள் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் சிவாநுபூதி கைவரப்பெற்று அற்புத மூர்த்தியாய் விளங்கினர்.

அக்காலத்தில் தஞ்சை ராசராசேச்சுரம் என் னும் பெரியகோயிலைக் கட்டி முடித்த முதலாவது ராச ராச அபயகுல சோழமன்னர், தம்பால் வரும் சிவனடியார்கள் தேவாரப்பதிகங்களில் ஒவ்வோர் பதி கங்களோ, பாடல்களோ சொல்லக் கேட்டு, அவை முழுவதும் எங்குந் தேடியுங் கிடையாமல் வருந்தி,

நம்பியாண்டார் நம்பிகளின் அற்புதத் திருவருளைக் கேள்வியுற்று நம்பிகளால் பொல்லாப் பிள்ளையார் திருவருளால் சைவத் தெய்வத் திருமுறைகள் எல்லாம் வெளிப்படுதற்கு உரியதாயிருந்தது திருநாரையூரே யாம்.

கணபதிக்கும் சிவபிரானுக்குஞ் சிறப்பாக உரிய தலம் சிவப்பிராசாதம் எனப் பெயர் பெறும். அச் சிவப்பிராசாத க்ஷேத்திரங்கள் நூற்றெட்டுள்ளன என்றும், அவற்றுள், விரைவில் போகம் மோக்ஷம் என்னும் சித்திகளைத் தரத்தக்கது திருநாரையூர் ஒன்றே என்றும், அத்தலத்தில் விநாயகர் எட்டுத் திருவிளையாடல்களையும் சிவபிரான் எட்டுத் திருவிளையாடல்களையும், செய்தருளினர் என்றும் இத்தலபுராணங் கூறும்.

பிரமபுத்திரனாகிய பிரசாபதி முனிவனது தவத்துக் கருள் செய்த திருமால் தனது அமிசத்தால் அம் முனிவனுக்கு நர நாராயணர் என இருபுத்திரர்களாயிருந்து தவத்தால் அம்பிகாபதியை மகிழ்வித்துப் பல முனிவர்களாலும் வணங்கப் பெற்றிருக்குங்கால், தேவரும் முனிவரும் போற்றும் புருசுண்டி முனிவர்

கணேச நாம பஜனை செய்துகொண்டு அவ்வழியே வர, எல்லா முனிவரும் இருக்கைவிட்டெழுந்து அம் முனிவரை வணங்கினார்கள். நாராயண முனிவன் மாத்திரம் அப்புருசுண்டி முனிவரை மதியாது செருக்குற்றிருந்தான்; அதனால் அம்முனிவர் வெகுண்டு கணபதியின் திருநாமபஜனை செய்யும் அடியாரை அவமதித்து நாரைபோல் சரீரத்தை நீட்டியிருந்தாய் ஆதலால், நாரையாகப் பிறக்கக்கடவாய் என்று சபித்தார். அதுகேட்ட நாராயண முனிவன் அஞ்சி அப்புருசுண்டி முனிவரை வணங்கிச் சாப நீக்கம் வேண்டலும், அம்முனிவர் இரங்கி நீ முற்பிறவி ஞானத்துடன் நாரையாகப் பிறந்து விநாயகப்பெருமானைப் பூசை செய்தால் இப்பாவம் நீங்கும்; அப்போது சிவலிங்கப் பெருமானையும் அருச்சனைசெய்தால் நாரைவடிவம் நீங்கி நற்கதியடைவாய் என்றார். நாராயண முனிவன் இங்கே வந்து பொல்லாப்பிள்ளையாரையும் சவுந்தரேசுர சுவாமியையும் வழிபட்டுச் சாபம் நீங்கி உயர் கதி பெற்றதனால் இத்தலம் **திருநாரையூர்** எனப் பெயர் பெற்றது.

இத்தலத்தில் பகமுனிவர், மார்க்கண்டேய முனிவர் முதலிய பல முனிவர்களும், பல அரசர்களும் வழி

பாடு செய்து விரும்பிய பேறுகளைப் பெற்றார்கள். திருநாவுக்கரசு நாயனார் சிதம்பரத்திலே தெரிசனஞ் செய்து உறையும் நாளிலே சீகாழியிலே திருஞான சம்பந்தப்பெருமான் தோணியப்பரருளால் ஞானப் பால் உண்டருளி அற்புத ஞானமூர்த்தியாய் எழுந் தருளியிருப்பதைக் காண விரும்பி அப்பொழுதே சீகாழிக்குச் செல்லற்கு அம்பலவாணரருள்பெற்றுப் புறப்பட்டவர் இத்திருநாரையூரில் வந்து தெரிசித்துப் பின்புதான் சீகாழிக்குச் சென்றார் என்பதனால் இத் திருநாரையூரின் பெருமைக்கு வேறு கூறவேண்டுவ தென்னை?

இத்துணைப் பெருமை வாய்ந்த திருநாரையூர்ச் சிவாலயத்தின் பரம்பரை டிரஸ்டியாகிய ஸ்ரீமான் ரா. முத்துக்குமரப்பிள்ளை அவர்கள் பல ஆண்டுகளாக முயன்றதன் பயனாக, திருப்பணிச்செல்வர்கள் பல ருடைய உதவிகொண்டு ஸ்ரீ பொல்லாப்பிள்ளையார் ஆலயம், மூலஸ்தானம், அம்மை கோவில், பரிவார ஆலயங்கள் இவைகளைப் புதுக்கி வர்ணம் வைத்தும், லெக்ஷுமி கோயில், சண்டேசுரர் கோயில், உட் கோபுரம், மதில், புறமதில் இவைகள் புதுத்திருப்பணி யாகச் செய்தும் இனிது நிறைவேறியிருப்பதால் கிராம

விருத்திக்கும்; தேச விருத்திக்கும், மன்னர் வெற்றிக்கும் ஏதுவாகிய பெருஞ்சாந்தியாகிய விசேஷ வழிபாடு ஆவசியமாகச் செய்யற்பாலது. ஆதலால், சிவபுண்ணிய சீலர்களாகிய அன்பர்கள் எல்லாரும் தங்கள் தங்களால் செய்யத்தக்க மனம் வாக்குக்காயம் பொருள் என்னும் நால்வகைப்பட்ட உதவிகளையும் செய்தும், செய்வித்தும் எங்களுடன் ஒன்றுசேர்ந்து இவ்விசேட சிவ வழிபாட்டை நிறைவேறச்செய்து ஸ்ரீபொல்லாப்பிள்ளையார் சவுந்தரேசுரர் பூர்ண கிருபை பெற்றுச்சீருஞ் சிறப்பும் ஓங்க வாழவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.

சுபம்.

வாழிதிரு நாரையூர் வாழியுயர் சைவநெறி
வாழிதிரு நீறுதிரு மாமறையும்—கேழிலா
ஆகமங்கள் வாழி யருண்முறைகள் வாழிபுவி
கேகமன்னன் வாழிநல னேய்ந்து.

திருச்சிற்றம்பலம்.

---

ஷை ஆலய பரம்பரைத் தர்மபரிபாலகர்கள், இங்ஙனம்,
எஸ். இரத்தினசபாபதிப் பிள்ளை, அன்பர்கள்,
எஸ். சொக்கலிங்கம் பிள்ளை. திருநாரையூர்.